# குடிநீர் அமைப்பு பராமரிப்பு வழிமுறை

- குடிநீர் அளக்கும் கருவியுள்ள அறையில் நீர்க்கசிவு இருப்பின், உடனே தயவு செய்து சரிசெய்யவும்.
- குடிநீர்க் குழாயில் ஏற்படும் நீர்க்கசிவினை, சாலையிலோ அல்லது மழை நீர் எடுத்துச் செல்லும் குழாய்களின் சந்திப்பிலோ காணும் நேரத்தில், எங்களுக்கு உடனே தெரிவிக்கவும்.
- குடிநீர் சேகரிக்கும் தொட்டியில் பந்து வால்வுகளை பொருத்தி குடிநீர் வழிந்து வீணாவது தடுக்கப்பட வேண்டும்.
- அதிகப்படியான அழுத்தம் உள்ள இடங்களில் சக்கர வால்வு மற்றும் தடை அடைப்பான் சாதனம் அமைக்கப்படவேண்டும்.
- கை பம்புகளை செயல்படுத்தும் முன்பு தேவைப்படின், பாதுகாப்பான குடிநீர் பயன்படுத்தப்படவேண்டும். பாதுகாப்பற்ற நீரை பயன்படுத்தக்கூடாது.
- உங்களுடைய இல்லத்தில் கழிவுநீர் இணைப்புக்கும் மற்றும் குடிநீர் இணைப்புக்கும் இடையே குறைந்தது ஒரு மீட்டர் இடைவெளியாவது இருக்க வேண்டும்.
- கை பம்பு இருக்கும் இடத்தில் ஒரு தளம் அமைக்க வேண்டும். சிந்துகின்ற நீரை வெளியேற்றுவது அவசியம்.
- குடிநீர் சேகரிக்கும் தொட்டி மற்றும் மேல்நிலைத் தொட்டி இவைகளை கிருமிநாசினியை பயன்படுத்தி அவ்வப்போது சுத்தம் செய்ய வேண்டும்.
- சுத்தமான சூழ்நிலையை குடிநீர்த் தொட்டி மற்றும் குழாய்கள் அமைந்துள்ள இடத்தில் செயல்படுத்துக.
- "சட்டத்திற்கு புறம்பாக விசை பம்புகள் மூலம் யாராவது குடிநீர் எடுக்கும் செயலைச் செய்தால் தயவு செய்து தெரியப்படுத்துங்கள்".
- குடிநீரில் மாசு எனில் உடனடியாக தெரிவிக்கவும்.
- பிராணிகளின் கழிவு, சாணிகள் போன்றவற்றை நேரடியாகவோ, மறைமுகமாகவோ கழிவுநீர்க் குழாய் மூலம் அகற்ற முனைய வேண்டாம்.
- நீர் விலை மதிப்பிட முடியாதது. இயற்கையின் அன்பளிப்பாகும். தவறாக பயன்படுத்தவோ வீணாக்குவதோ கூடாது.
- லாரிகள் மூலமாக, திருமணம், பொது நிகழ்ச்சிகள் மற்றும் இதர தேவைகளுக்கு குடிநீர், கட்டணத்தின் பேரில் விநியோகிக்கப்படும்.
- மழைநீரினை வீட்டில் சேகரித்துக் கொள்ளும் வகையில் வசதிகளை அமைத்துக் கொள்ளவும். இதற்கான வழிமுறை விளக்கங்கள் எங்களிடமிருந்து இலவசமாக பெற்றுக் கொள்ளலாம்.
- சென்னைக் குடிநீரை குடிப்பதற்கும் சமையலுக்கும் மட்டும் பயன்படுத்தவும். தோட்டத்திற்கோ, வாகனங்கள் கழுவுவதற்கோ சுத்தமான குடிநீரை பயன்படுத்த வேண்டாம்.

# கழிவுநீரகற்று அமைப்பு பராமரிப்பு வழிமுறை

- உணவகம் மற்றும் தங்கும் விடுதி, கால்நடைத் தொழுவங்கள் மற்றும் பொதுவான சமுதாயக் கூடங்கள் ஆகிய இடங்களில் கழிவுநீர் இறுதி தொட்டிக்கு முன்பாக தனிவடிகட்டி தொட்டி அமைக்கவும்.
- மழை நீரை கழிவுநீரகற்றும் குழாயில் செல்ல அனுமதிக்காதீர்கள்.
- கழிவு உபகரணங்களை 0.9 மீட்டர் (3 அடி) சாலை அளவிலிருந்து உயரத்தில் அமையுங்கள்.
- மலக்குழிகளுக்கு அதிகமாக உள்ள இல்லங்களில் 100 மி.மீ. (4 அங்குலம்) விட்டமுள்ள கழிவுநீர்க் குழாய்கள் உதவாது. கழிவுநீர்க் குழாய்களின் அளவை அதற்குத் தகுந்தாற்போல் அதிகமாக்குங்கள்.
- கழிவு நீரகற்றும் அமைப்புகளில் துணிகள், கந்தல்கள், உடைந்த பீங்கான் மற்றும் காய்கறிகளின் துண்டுகள் போன்றவற்றை எறியாதீர்கள்.
- கழிவுநீரகற்றும் அமைப்புகளுக்குள், இரசாயனம் தொடர்பான பெயிண்ட், சிமெண்ட் போன்றவைகளை கழுவி விடக்கூடாது.
- தரமான அடிப்படையில், தரைமட்டத்தில் அமையும் தடுப்பான் மற்றும் "கல்லி" முதலியன கட்டப்படுதல் வேண்டும்.
- கழிவுநீர் அமைப்பின் மனிதன் நுழைவாயில் மூடிகளை உடைப்பதோ மற்றும் எடுப்பதோ கூடாது. இவ்வாறு செய்தால் அது மரணத்தின் கண்ணியாக மாறலாம்.